# துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் முன்னெடுப்பில் நடைபெற்ற இளம் பேச்சாளர்களுக்கான பயிற்சி முகாம் 2-வது நாள் காட்சிகள்!






முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டை முன்னிட்டு, இளைஞரணி சார்பில் நடத்தப்பட்ட "என் உயிரினும் மேலான..!' பேச்சுப்போட்டியின் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் உள்ளிட்ட 200 இளம் பேச்சாளர்களை, திராவிட முன்னேற்றக் கழகத்தின் அடுத்த தலைமுறைப் பேச்சாளர்களாக உருவாக்க, சென்னை அண்ணா அறிவாலயம் கலைஞர் அரங்கில் 15, 16 ஆகிய நாட்களில் நடத்தப்பட்ட இரண்டு நாள் பயிற்சி முகாமின் நிறைவு நிகழ்ச்சியில் நேற்று முன்தினம் (16.2.2025) தமிழ்நாடு துணை முதலமைச்சரும், கழக இளைஞர் அணிச் செயலாளருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் இளம் பேச்சாளர்களுக்கு பாராட்டுச் சான்றிதழ்களை வழங்கினார்.




சென்னை – அண்ணா அறிவாலயம் – கலைஞர் அரங்கில் 16.2.2025 அன்று தி.மு.க. இளைஞர் அணி சார்பில் – துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் முன்னெடுப்பில் 2–வது நாளாக நடைபெற்ற இளம் பேச்சாளர்களுக்கான பயிற்சி முகாமில், 'நூலைப்படி' எனும் தலைப்பில் வரலாற்று ரீதியிலான புத்தகங்கள், கோட்பாட்டு ரீதியிலான புத்தகங்கள் எனப் பலவற்றை குறிப்பிட்டும், அவற்றை எப்படி எல்லாம் படிக்கலாம் என்றும் திராவிட இயக்கத் தமிழர் பேரவைத் தலைவர் பேராசிரியர் சுப.வீரபாண்டியன் மிகச்சிறப்பாக எடுத்துரைத்தார்.

கழக இளைஞர் அணி சார்பில் நடைபெற்ற இளம் பேச்சாளர்களுக்கான பயிற்சி முகாமில், மேடைப்பேச்சின் நுட்பம் குறித்து, திராவிடர் கழகத் துணைப் பொதுச்செயலாளர் வழக்கறிஞர் சே.மெ.மதிவதனி உரையாற்றி, எந்தெந்த இடத்தில் எப்படி பேசவேண்டும், எதைத் தவிர்க்க வேண்டும் போன்ற மேடைப் பேச்சின் நுட்பங்களை, இளம் பேச்சாளர்களுக்கு மிகச்சிறப்பாக விளக்கினார்.





இளம் பேச்சாளர்களுக்கான பயிற்சி முகாமின் இரண்டாம் நாள் நிகழ்வில், இட ஒதுக்கீட்டின் அவசியத்தை உணர்த்தும், செயல்முறைப் பயிற்சி மிகவும் எளிமையான முறையில், இளம் பேச்சாளர்களை வைத்தே நடத்தப்பட்டது. இச்செயல்முறைப் பயிற்சி, இட ஒதுக்கீட்டின் முக்கியத்துவத்தை அவர்களுக்கு உணர்த்தியது.





இளம் பேச்சாளர்களுக்கான பயிற்சி முகாமில் யூ ட்யூப் வலைத்தளத்தை, இளம்பேச்சாளர்கள் எவ்வாறு பயன்படுத்திக்கொள்ள வேண்டும், அதற்கான தொழில்நுட்ப உத்திகள், பிரச்சினைகளை எதிர்கொள்ளும் வழிகள் ஆகியவற்றை ஊடகவியலாளர்கள் இந்திரகுமார் தேரடி, மில்டன் ஆகியோர் மிகச்சிறப்பாக விளக்கினர்.